# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் 4 ஆண்டு கால சாதனை!

## முதல் பக்கத் தொடர்ச்சி

13.12.2021 அன்று மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட தேசிய விருதுகள் !

சிறந்த நீர் மேலாண்மைக்காக 29.3.2022 அன்று தேசிய அளவில் மூன்றாம் இடம் பெற்றமைக்கான விருது !

மெப்ஸ் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஏற்றுமதி நிறுவனங்களின் சேவையைப் பாராட்டி குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்கள் 25.4.2022 அன்று வழங்கிய சிறந்த ஏற்றுமதியாளர் விருது !

தேசிய அளவில் சிறப்பாகச் செயல்பட்ட தமிழ்நாட்டின் 12 ஊராட்சிகளுக்கு ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் 11.5.2022 அன்று வழங்கிய விருது !

மகப்பேறு சிக்கல்கள் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களைக் கண்டறிந்து சிகிச்சை வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம் என 27.6.2022 அன்று வழங்கப்பட்ட ஒன்றிய விருது

இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்ட 112 மாவட்டங்களில் ஒன்றாக குறுசிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மேம்பாட்டிற்காக விருதுநகர் மாவட்டத்தின் சிறந்த பங்களிப்பிற்கு 1.7.2022 அன்று வழங்கப்பட்ட தேசிய அளவிலான முதல் பரிசு.

சுகாதாரத்திற்கான மதிப்பீட்டில் தேசிய அளவில் மூன்றாம் இடம் பெற்றமைக்கு 2.10.2022 அன்று வழங்கப்பட்ட குடியரசுத் தலைவர் விருது. !

இந்தியாவில் தூய்மையைப் பராமரிப்பதில் சிறந்து விளங்கிய தமிழ்நாட்டிற்குத் தேசிய அளவில் மூன்றாவது பரிசாக 2.10.2022 அன்று தமிழ்நாடு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களிடம் குடியரசுத் தலைவர் வழங்கிய விருது !

ஜல்சக்தித் திட்டத்தினை தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுத்தி முதலிடம் பெற்றமைக்காக 2.10.2022 அன்று குடியரசுத் தலைவர் வழங்கிய தேசிய விருது !

ஒன்றிய அரசின் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் - சிறந்த உள்நாட்டு மீன் உற்பத்தி மாவட்டமாக தேர்வு செய்யப்பட்ட தஞ்சாவூர் மாவட்டதிற்கு 13.12.2022 அன்று வழங்கப்பட்ட விருது. !

ஜெர்மன் தலைநகர் பெர்லின் சர்வதேசச் சுற்றுலா சந்தையில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களிடம் 8.3.2023 அன்று வழங்கப்பட்ட இந்திய அளவில் சிறந்த சுற்றுலா அமைச்சகத்திற்கான பட்வா சர்வதேசப் பயண விருது !

கடற்கரை முகப்புப் பகுதி மேம்பாட்டுப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டமைக்காக 28.3.2023 அன்று வழங்கப்பட்ட ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சக விருது !

காசநோயை ஒழிக்க தமிழ்நாடு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டி - வாரணாசியில் 6.4.2023இல் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்நாட்டின் ஒன்பது மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட விருதுகள் !

காகிதம் இல்லாச் சட்டமன்றத் திட்டத்தினை மிகச் சிறப்பாகவும், விரைவாகவும் செயல்படுத்தியமைக்காக ஒன்றிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சகம் 3.7.2023 அன்று வழங்கிய விருது !

புதுடெல்லி பிரகதி மைதானத்தில் 20.11.2023 அன்று நடைபெற்ற உலக உணவுத் திருவிழாவில் - பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு, சிறு நிறுவனங்களின் சிறந்த செயல்திறனுக்காகத் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட விருது !

திருவைகுண்டம் அணைக்கு உலகப் பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்புக்காக 21.11.2023 அன்று வழங்கப்பட்ட சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணைய விருது !

புதுடெல்லியில் குடியரசுதின விழா அணிவகுப்பில் பங்கேற்ற தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்திக்கு 30.1.2024 அன்று வழங்கப்பட்ட தேசிய அளவில் மூன்றாம் இடம் பெற்ற விருது !

ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்கள் தேசிய அளவில் ஒட்டுமொத்த சிறந்த செயல்திறன் கொண்ட தருமபுரி சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 14.8.2024 அன்று வழங்கிய முதல் பரிசு !

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்காக ஐ.நா.அமைப்பின் 2024ஆம் ஆண்டிற்கான யுனைடெட் நேஷன், இண்டர்ஏஜென்சி டாஸ்க் போர்ஸ் விருதை (United Nation Interagency Task Force Award Smart Porche Award) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்

ஐ.நா. பிரகடனப்படி தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிகளுக்கு இந்திய அளவில் சிறந்த வங்கிச் சேவைக்காக 26.11.2024 அன்று ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்கள் தமிழ்நாடு கூட்டுறவு அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களிடம் வழங்கிய விருது !

29.11.2024 அன்று புதுடெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்ற

43-வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சியின், "2047-இல் இந்தியா" என்ற கருப்பொருள் விளக்கக் காட்சிப்படுத்தலைச் சிறப்பாக அமைத்தமைக்காக தமிழ்நாடு அரங்கிற்கு வழங்கப்பட்ட மூன்றாம் விருது !

திருவாரூர் முத்துப்பேட்டை காவல் நிலையம், 2024-ஆம் ஆண்டில் சிறந்த காவல் நிலையம் என ஒன்றிய உள்துறை அமைச்சகம் வழங்கிய விருது.

25.4.2025 அன்று 2024-ஆம் ஆண்டிற்கான சிறந்த ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை தேசிய விருது !

இவைபோல, ஒன்றிய அரசு வழங்கிய பல்வேறு விருதுகளுடன் தேசிய அளவிலும் மாநில அளவிலும் உள்ள பல்வேறு நிறுவனங்கள் திராவிட மாடல் அரசின் நிர்வாகத் திறனைப் பாராட்டிப் பல விருதுகளை வழங்கியுள்ளன.

இவைமட்டுமல்லாமல் பல்வேறு பத்திரிகை நிறுவனங்களும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியைப் பாராட்டி மிகப்பல விருதுகளை வழங்கியுள்ளன.

முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு நான்காண்டு கால ஆட்சியில் நிகழ்த்தியுள்ள மகத்தான சாதனைகளுக்காக இதுவரை எந்த முதலமைச்சரும் பெற்றிராத வண்ணம் திசையெட்டும் போற்றிப் பாராட்டும் வண்ணம், ஒன்றிய அரசும், பல்வேறு நிறுவனங்களும், பத்திரிகைகளும் பாராட்டி வழங்கியுள்ள விருதுப் பட்டியலைக் காணும்போது, முதலமைச்சர் அவர்களை மிகச் சிறந்த நிர்வாக ஆளுமை மிகுந்தவர் எனப் பலரும் மகுடம் சூட்டுவது நமது தமிழ்நாட்டிற்குக் கிடைத்துள்ள தனிப் பெரும் சிறப்பாகும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# திருப்பத்தூரில் இளைஞர் அணி பயிற்சி முகாம்!

### அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமை! நாகனி செந்தில் குமார் அறிவிப்பு!

சிவகங்கை.மே.5-

சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி ப.செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறிஉள்ளதாவது. கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் கழக மாநில இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் சிவகங்கை மாவட்டத்தில் புதிதாக ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அத்தகைய நிர்வாகிகளுக்கான அறிமுக கூட்டமும் பயிற்சி கூட்டமும் நாளை 6 ம் தேதி திருப்பத்தூரில் நடைபெறுகிறது . மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் நாளை காலை திருப்பத்தூர் சிவகங்கை சாலையில் உள்ள ராஜேஸ்வரி மஹாலில் காலை 9 மணி அளவில் நடைபெறுகிறது. கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ராஜா ஆகியோர் முன்னிலை வைக்கிறார்கள்.

இந்த கூட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர ,பேரூர் கழக இளைஞரணிஅமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களுக்கு பயிற்சியினை எழுத்தாளர் கோவி. லெனின் இளமாறன் ஆகியோர் அளிக்கிறார்கள் . எனவே இந்த கூட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இளைஞரணி ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொண்டு இந்த பயிற்சி முகாமில் பங்கேற்று சிறப்பித்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் நாகனி ப.செந்தில்குமார் தெரிவித்துள்ளார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி. ப. செந்தில் குமார் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் செய்து வருகிறார்கள்.

---

### தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில்

# அகரம் தென் ஊராட்சிக்கு வளர்ச்சி திட்டப்பணிகள்!

### எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.வுக்கு தொகுதி மக்கள் நன்றி!

தாம்பரம், மே. 5-

தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில் இருந்து தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அகரம்தென் ஊராட்சியின் வளர்ச்சி பணிகளுக்காக ரூ.1.02 கோடி 72ஆயிரம் வழங்கியுள்ளார்.

அகரம்தென் ஊராட்சியில் சமுதாய நலக்கூடத்திற்கு சுற்றுசுவர் அமைக்க ரூ.25.00 இலட்சமும், குறிஞ்சி நகரில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்ட ரூ.17.25 இலட்சமும், காமராஜ் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்க ரூ.10.22 இலட்சமும், ஒதுக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது.

மேலும் அகரம்தென் ஊராட்சியில் 01/05/2025 நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்ததில் அகரம்தென் பஞ்சாயத்திற்குட்பட்ட கஸ்பாபுரத்தில் புதியதாக அங்கன்வாடி கட்டிட ரூ.17.25 இலட்சமும், நியாயவிலை கடை அமைக்க ரூ.13.50 இலட்சமும், அகரம்தென்னில் புதியதாக நியாயவிலை கடை அமைக்க ரூ.13.50 இலட்சமும், அன்னை சத்தியா நகரில் பேருந்து நிழற்குடை அமைக்க ரூ.6.00 இலட்சமும், தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில் இருந்து எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஒதுக்கினார். இதற்காக அகரம் தென் ஊராட்சி பொதுமக்கள் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.வுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

---

### அடாவடி கடன் வசூல் செய்வதை தடுக்க

# மசோதா நிறைவேற்றிய முதல்வர் - துணை முதல்வருக்கு நன்றி!

### தேனி மகளிர் சுய உதவிக்குழு நிர்வாகிகள் தீர்மானம்!

தேனி,மே. 5-

தேனியில் உள்ள தனியார் ஹோட்டலில் பெண்கள் தொழில் முனைவோர் சார்பில் நடந்த மகளிர் சுய உதவி குழுவினரின் ஆலோசனைக் கூட்டத்தில் ,தாங்கள் தயார் செய்த பொருட்களை கண்காட்சிக்கு வைத்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு மற்றும் மகளிர் குழுக்கள் கூட்டமைப்பு உள்ளிட்ட அமைப்பினர் கலந்து கொண்டனர்.

பெண் தொழில் முனைவோர்கள், குறிப்பாக சுய உதவி குழு பெண்கள் அவர்களுக்கு வழங்கப்படும் கடன்களை வசூலிக்க, நிதி நிறுவனங்கள் அடாவடியாக நடவடிக்கை எடுத்து வந்த நிலையில்,

சுய தொழில் புரிந்து வரும் பெண்கள், பல்வேறு காரணங்களால், வறுமையில் இருந்து வெளிவர முடியாமலும், மனதளவிலும் பாதித்து, குடும்ப உறவிலும் பாதித்து, சமூகத்திலும் பாதித்து, சிலர் தற்கொலைக்கு முயற்சி செய்யும் சூழலில் ,இதற்கு எப்போது விடை கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டிருந்தனர்.

மேலும் இப் பிரச்சனை தொடர்பாக தமிழக முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கைகள் அனுப்பி வைத்தனர்.

இதன் அடிப்படையில் தமிழக அரசு சமீபத்தில் தனி மசோதா ஒன்றை உருவாக்கி தாக்கல் செய்துள்ளது.

இதனால் இனி அடாவடி வசூலில் இருந்து பெண்கள் காப்பாற்றப்படுவார்கள். இப்படிப்பட்ட மசோதாவை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில் தாக்கல் செய்த பெண்களின் காவலர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பெண்கள் தொழில் முனைவோர் இந்நிகழ்ச்சியின் வாயிலாக, நன்றிகளை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றினர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அமைப்பின் சார்பில் ஒருங்கிணைப்பாளர் ராஜன் செய்து இருந்தார். உடன்டாக்டர் டோலோ வின்சி, பரமேஸ்வரி, ஜோதி நேச முருகன், ஈஸ்வரன், இந்திரா வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





திருச்சி தெற்கு மாவட்டத்தில் 72 நிகழ்வுகள் நடைபெற்றது அதன் இறுதி நிகழ்வாக மாபெரும் மகளிருக்கான கபாடி போட்டி நடைபெற்றது. மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் பா. சரவணன் வரவேற்றார். இந்நிகழ்விற்கு தலைமை மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் செந்தமிழ்ச்செல்வன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மாமன்ற உறுப்பினர் பொற்கொடி, சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இரண்டு நாட்களாக நடைபெற்ற போட்டிகளின் வென்ற அணிகளின் இறுதி போட்டியை கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே. என். நேரு, திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இறுதியாக போட்டியின் முடிவில் நான்கு அணிகளுக்கான பரிசுகளை திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் கிழக்கு ஒன்றியம் மொரட்டாண்டி பகுதியில் விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றிய குழு தலைவர் உஷா முரளி, ஆர்.எஸ்.வாசன், ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.டி.முரளி, கிளியனூர் ராஜி, மைதிலி ராஜேந்திரன், நகரச் செயலாளர் ஜெயமூர்த்தி, ஒன்றிய குழு உறுப்பினர் காமாட்சி விஜயரங்கன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் அறிவிப்பு!

திருப்பூர், மே 5 -

திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் 05-05-2025 திங்கட்கிழமை இன்று மாலை 4.00 மணியளவில் திருப்பூர், 15 வேலம்பாளையம், பார்ச்சூன் ஹோட்டல் அருகில் அமைந்துள்ள மாவட்ட, மாநகர கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன் தலைமையில் நடைபெற உள்ளது.



அதுசமயம் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகர அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து.

2. நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் இது பல்லாண்டு

கழக ஆட்சியின் நான்காண்டு சாதனைகள் குறித்து தொகுதி, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக சார்பாக சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள், தெருமுனை கூட்டங்கள் நடத்துவது குறித்து.

3. ஜூன் 1ம் தேதி மதுரையில் நடைபெறும் கழகப் பொதுக்குழு கூட்டம் குறித்து.

4.கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.